# தட்டாரபட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை திருமதி.ர.சத்தீஸ்வரி.,

ந.க.எண்: 01/2022/தட்டாரபட்டி ஊராட்சி நாள்: 25.04.2023

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம் தட்டாரபட்டி ஊராட்சி / வேடசந்தூர் கிராமம் புல எண்: 831/2B , 832/2B, 833/3 அமையும் 9690 சமீ பரப்பளவு 2.39.5 ஏக்கர் உள்ள இடத்தில் மனை எண்கள்: 1 முதல் 45 வரை உள்ள மனைகளாக பிரிக்கப்பட்டு உதவி இயக்குநர் நகர் ஊரமைப்பு துறை திண்டுக்கல் - தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைகளை அங்கீகரித்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:

1. திரு. சுவாமிநாதன் , 24/இ12,கொங்கு நகர்., ஆத்துமேடு , வேடந்தூர் தாலுகா, விண்ணப்ப நாள்: 18.03.2023
2. உதவி இயக்குநர்,மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் ந.க.எண்: K6F9P61L /2022/TCP நாள்: 27.12.2023
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 19799/2020/போ. நாள்: 24.12.2020
4. மாவட்ட வன அலுவலர் திண்டுக்கல் வன கோட்டம்,கடிதம் ந.க.எண்:2271/2022/வ.1 நாள்:25.03.2022
5. அரசாணை எண் 138 ,வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சி துறை நாள் : 04.06.2004
6. அரசாணை நிலை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சித்துறை நாள்: 04.05.2017
7. அரசாணை நிலை எண் 18. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள்: 04.02.2019 மற்றும் மற்றும் அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020
8. அரசாணை எண் 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை UD4(3) நாள்: 23.03.2020
9. அரசாணை எண் 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை UD4(1) நாள்: 09.12.2020
10. அரசாணை எண் 181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை UD4(3) நாள்: 09.12.2020
11. அரசு கடித எண் 19113/ந.வ.4 (3)/2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 30.08.2017
12. ஆணையர் ,நகர் ஊரமைப்பு சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்: 13686/2017/எல்.ஏ.1 நாள்:09.09.2017
13. தலைவர், தட்டாரபட்டி ஊராட்சி கடிதம் ந.க.எண்: 11/2022 நாள்: 18.03.2023
14. தானசாசனம் எண்: 1231, 1232 நாள்: 16.12.2022
15. அரசு தலைப்பு செ.சீ.எண்: 20230318003189 நாள்: 18.03.2023
16. ஊராட்சி பல்வகை வரவு இரசீது எண்: 1356 நாள்: 25/4/2023 தீர்மான எண்: 84 நாள்: 24/4/2023

உத்தரவு

திண்டுக்கல் மாவட்டம் ,வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், தட்டாரபட்டி ஊராட்சி / வேடசந்தூர் கிராமம் புல எண்: 831/2B , 832/2B, 833/3 அமையும் 9690 சமீ பரப்பளவு 2.39.5 ஏக்கர் உள்ள இடத்தில் மனை எண்கள்: 1 முதல் 45 உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அரசுதலைப்பில் மனுதாரர் செலுத்த வேண்டிய கட்டண விபரங்களை குறிப்பிட்டு பார்வை 13 ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக அறிவிப்பு செய்யப்பட்டது. மனுதாரர் மேற்படி அறிவிப்பின்படி வளர்ச்சி கட்டணம் தொகை ரூ. 190300/- ( ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூறாயிரத்து முந்நூறு மட்டும் ) ஊராட்சி கணக்கிலும் , சந்தை நில மதிப்பீடு 3% மற்றும் பரிசீலனை கட்டணம் சேர்த்து மொத்தம் ரூ. 17724/- (ரூபாய். பதினெழாயிரத்து எழுநூற்று இருபத்து நான்கு மட்டும்) அரசுத்தலைப்பிலும் செலுத்தியுள்ளார். எனவே, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனை எண்கள்: 1 முதல் 45 ஆக மொத்தம 45 மனைகளுக்கு தட்டாரபட்டி ஊராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் மனைபிரிவு அனுமதி அளித்து இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலையின் அமைப்புகள்,அளவுகள்,பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையினை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணம் கொண்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கு ஊராட்சி பகுதிக்கு குறைந்தது 3 மீட்டர், அளவுள்ள திறந்த வெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில்கிணறுகள்,கழிப்பறை,எருக்குழி, மாட்டுத்தொழுவம்,கார்செட், கொட்டகை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச்சார்ந்த கட்டிடம் மற்றும் அமைக்கப்பட வேண்டும். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையில் நீளத்தில் மூன்றில் ஒருபாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நிலமட்டத்திலிருந்து 3 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
3. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை பெருமட்டத்திற்கு உயர்த்த வேண்டும்.
4. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்களுக்கான மனையை வரைபடத்தில் கட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்படவேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்தபடவேண்டும்.
5. விற்பனைக்கு உண்டான மனைகளை விற்பனை செய்யும்பொது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமை மப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகலினை மனையினை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவின் நுழைவுவாயிலில் 6 x 4 வரையிலான நிரந்தர தகவல் பலகையின் மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்படவேண்டும்.

இணைப்பு: அங்கீகரிக்கப்பட்ட வரைபட பிரதிகள்

தலைவர்
ஊராட்சி மன்ற தலைவர்,
தட்டாரப்பட்டி ஊராட்சி
வேடசந்தூர் வட்டாரம்

பெறுநர்

திரு. சுவாமிநாதன் ,
24/இ12,கொங்கு நகர்.,
ஆத்துமேடு ,
வேடந்தூர் தாலுகா,